"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக். பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு பங்குனிமீ 7-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 10-ம் இல.

# கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரிக் கன்னிகாஸ்திரிகளுக்குப் பிரியாவிடை

## சிரேஷ்ட டக்றர்மாரின் பாராட்டு

கொழும்பு, அரசினர் ஆஸ்பத்திரியில் கன்னியாஸ்திரிமார் 1886-ம் ஆண்டு தொடக்கமாகச் சேவை செய்து வந்தவர்கள். இவ்வருடம் பங்குனிமாதம் 15-ம் திகதியுடன் அவர்களது சேவையை நீக்கிவிடச் சென்றவருடம் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இக்கன்னியர்களுடன்சேவைசெய்தவர்களும், அவர்கள் உதவிபெற்றபிணியாளர்களும், அவர்களது சேவையின் தன்மையை அறியவந்த பொது மக்களுமாக இவர்களின் பிரிவினுல் நாட்டின் பல பாகங்களிலும் சோர்வுற்று, மன முடைந்து இருப்பவர்களின்தொகை பல்லாயிரம்.

இத்தகையோரால் சென்றமாதம் 22-ந்திகதி கொழும்பு, அரசினர் ஆஸ்பத்திரி நிலையத்தில் இக்கன்னியர்களுக்குப் பிரியாவிடை அளிக்கப்பட்டது. சோகம் நிறைந்த வைபவம். அங்கு கூடியவர்களின் மன நிலையை அவர்களது முகவாட்டம் காட்டிற்று: பலபேரும் இவர்களின் தியாகம் நிறைந்த அரியசேவையைப் பாராட்டினர்.

முன்னுள் அநேக வருடகாலமாக பிரசவமருத்துவ நிபுணராய் கடமை ஆற்றியவரும், பின்பு செனெட் சபைத் தலைவராக இருந்தவரும், இன்று இலங்கைச் சர்வகலாசாலை உபவேந்தராய் இருப்பவருமாகிய டக்றர் நிக்கலஸ் அட்டிகல ஆற்றிய சொற்பொழிவில் இக்கன்னியர்களுடன் தான் நீண்டகாலம் பழகி வந்தவரென்றும் அவர்கள் சாதி சமய வித்தியாசம் சற்றேனும் பாராட்டாது கடமையாற்றி வந்தவர்கள் என்பதற்குத் தான் சாட்சியென்றும் கூறினுர்.

இன்றைய சுகாதார மந்திரியின் பாராளுமன்ற காரியதரிசியாகிய ஜே. பி. ஒபசேகர "இக்கன்னியர்களின் வேலையை அரசாங்கம் நிற்பாட்டியது நமது நாட்டுக்குப் பெரும் நஷ்டம். அவர்களின் பிரிவால் எமது நாட்டின் நல்நிர்வாகத்தின் ஒரு பகுதி அற்றுப் போகின்றது"என்ருர்.

பேராசிரியர் மில் ரேய் போல், இவர்களைத் தான் சிறுபிள்ளை தொடக்கமாக 'அறிந்தவரென்றும் அன்பே உருவானவர்களென்றும்' இவர்கள் உலகில் எங்கு வேலை செய்கின்ருர்களோ அப்பகுதி பாக்கியம் பெற்றது என்றும் இவர்களது தியாகத்துக்கு உரித்தான வணக்கத்தைச் செலுத்தத் தான்எப்போதும் காத்திருப்பவரென்றும் கூறினுர்.

மேலும் பலர் நன்றிபாராட்டிப் பேசியதன்பின்பு அன்பளிப்புகள் பல கொடுக்கப்பட்டன. ஈற்றில், கன்னியர்களின் சிரேஷ்டதாயார், அன்று நடந்த கொண்டாட்டத்துக்கும், என்றும் இந்நாட்டினர் காட்டி வந்த அன்புக்கும் நன்றிகூறி, தமது செபங்களில் இந்நாட்டுமக்களை எப்போதும் நினைவுகூருவதாகவும் வாக்களித்தார்.

## திருச்சபை வழிபாட்டு முறையில் தீவிர மாற்றங்கள்

"திருச்சபை வழிபாட்டு முறையில் தீவிர மாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன. சிலர் இம்மாற்றங்கள் விரைவில் வரவேண்டும் என்று விரும்புகின்றனர். மறுசிலர் மாற்றங்கள் நடைபெறுவதை விரும்பவில்லை. ஆனுல் திருச்சபையின் வளர்ச்சிக்குச் சில மாற்றங்கள் அவசியமாக இருக்கின்றன. இவைகள் யாவும் திடீர் திடீரெனப் புகுத்தப் படக்கூடாது; மெத்தனவே நடைமுறையில் கொண்டுவரப்படும்"— இவ்வாறு வழிபாட்டு முறைத்திருத்தக்குழுவில் ஆங்கில நாட்டு மேற்றிராணிமாரின் சார்பில் பங்குபெற்ற பேர்மிங்காம் பிரதேச அதிமேற்றிராணியாராகிய கிறிம்ஷோ ஆண்டகை கூறினுர்.

பாப்பரசருடைய அனுமதிபெற்ற சில வழிபாட்டுமுறைத் திருத்தங்கள் பிரான்ஸ் முதலிய தேசங்களில் இவ்வருட விபூதித் திருநாளன்றே நடைமுறையில் ஆகிவிட்டன. ஆனுல் இங்கிலாந்தில் நடைமுறைக்கு வருதல் பின்போடப் பட்டிருக்கின்றது:

அனுமதி பெற்ற வழிபாட்டு முறைத் திருத்தங்களில் திவ்விய பூசைப்பலி முக்கிய இடம் பெறுகின்றது: அது மிகவும் பொருத்தமானதே. வழிபாட்டு முறைகளில் பூசைப்பலியை விடச் சிறந்தது வேறு இல்லை. இது விசுவாசிகளின் மனதிலே பதிய வேண்டியது. இதனுலேயே, உறுதிப் பூசுதல் திருச்சடங்கும், மெய்விவாகத் திருச்சடங்கும் பூசைப் பலியின் ஒரு பாகமாகப் புதுமுறையில் இடம் பெறுகின்றன. பூசைப்பலி ஒப்புகொடுத்தலில் விசுவாசிகள் யாவரும் குருவானவருடன் ஒன்றித்து ஒப்புக் கொடுக்க உதவியாக மாற்றங்கள் அமைந்திருக்கின்றன. பூசைப் பலியின் சிலபாகங்கள் சுயபாஷைகளில் நடைபெற அனுமதிக்கப்பட்டிருப்பது இதற்காகவே.

## இங்கிலாந்தில் மேயர்ரேச்சின்சேவை

அயர்லாந்து லிமெறிக் பட்டணத்திலே பிறந்து, இந்திய சைனியத்தில் வேலைசெய்து இளைப்பாறிய மேஜர் ரேச் என்பவரின் அயராஉழைப்பின் பயனுக பல அரிய கத்தோலிக்க சேவைகள் பிரித்தானிய தீவுகளில் நடைபெறுகின்றன.

● லண்டன் நகரில் பெயர் பெற்ற ஹயிட்பார்க் நந்தவனத்தில் சென்ற சில வருடங்களாக கத்தோலிக்க பொதுமக்கள் ஞாயிறு தினங்களில் ஒன்று சேர்ந்து செபமாலை ஓதிவரும் நல்லவழக்கத்தைத் தொடக்கி நடத்திக்கொண்டு வருகிருர்.

● சிறைச்சாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் சென்று அங்கு கைதிகளுடனும் வியாதிஸ்தர்களுடனும் ஒன்று சேர்ந்து செபஞ்செய்வதும் செபமாலை ஓதுவதும் அவரது வழக்கம். இவ்வேலையில் அவர் பலதொண்டர்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ருர்.

● சமீபகாலத்தில் அவர் லண்டன் மாநகரில் வசிக்கும் மிக வறிய வயோதிப குடும்பங்களுக்கு அவர்கள் தமது அந்திய காலத்தில், தாய்நாட்டில், கத்தோலிக்கசூழலில், கன்னிகாஸ்திரிகளின் பராமரிப்பில் மரணிக்கும் பாக்கியம் பெற்றுக்கொடுக்க ஒரு கத்தோலிக்க குடியேற்றத் திட்டத்தை வகுத்து வருகின்ருர். குடியேற்ற நிலப்பகுதி 'நொக்' என அழைக்கப்படும் இடத்தில் ஒரு திருயாத்திரை ஸ்தலத்துக்கு அருகாமையிலாம். அங்குள்ள வைத்தியசாலைக்கு கெனடிவைத்தியசாலையெனப் பெயரிட்டிருக்கின்ருர். பிரதானவீதி செபமாலை வீதியென அழைக்கப்படுகின்றது. இத்திட்டம் முற்றுப்பெற மூன்று வருடங்கள் செல்லும். 250 குடும்பங்கள் 25ஏக்கர்நிலத்தில் குடியேற்றப்படும்.

## பங்குக் குருமாருக்குப் பாப்பரசரின் போதனை

தபசு கால ஞானெடுக்கப் போதகர்களுக்கும், பங்குக்குருமார்களுக்கும் விபூதித் திருநாளன்று பரிசுத்த பாப்பரசர் நடத்திய போதனையில், "இக்காலம் பெரும் நெருக்கடியான காலம். எமது இலட்சியங்களுக்கு உலகில் ஆபத்து ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே சத்திய வேதத்தின் உண்மைகள் திடமான முறையில் போதிக்கப்படவேண்டும். காலத்துக்கு ஏற்ற முறைகள் கையாளப்படல் வேண்டும். நல்லொழுக்கப் பாதையில் செல்வதில் ஒருவகை மந்த நடையைக் காண்கின்ருேம். கோவில்களில் மாத்திரம் பிரசங்கிக்க வேண்டுமென்று இல்லை. போதனை தேவைப் படுவோரை நாம் தேடிச் செல்ல வேண்டும். கோவில்களுக்கு வராதவர்களை நாம் வீட்டிற் சந்திக்கலாம். ஆபாசமான கதைகளைப் பரப்புவதிலும், துர்இச்சைகளைத் தட்டிஎழுப்பும் காட்சிகளை நடத்துவதிலும் பலர் நேரத்தைச் செலவு செய்கின்றனர். இவற்றுக்கு எதிராகத் திடமான முறைகள் நாம் கையாளவேண்டும்"என்ருர் பாப்பரசர்.

## கருதினுல் மின்சென்ரி

ஹங்கேரி தேசத்தின் கருதினுல் மின்சென்ரி அவர்களுக்கு எதிராக கொம்யூனஸ்து அரசாங்கம் கொண்டுவந்த குற்றச்சாட்டுகளை வாபஸ் செய்துகொள்ள இருப்பதாகவும் விரைவில் கருதினுல் அவர்கள் விடுதலைபெற இருப்பதாகவும் இருவாரங்களுக்குமுன் மேல்நாடுகளில் இருந்துவந்த வதந்திகள் ஆதாரமற்றவை என அத்தேச செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**பங்குனி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞா. | தபசுகாலத்தின் 4-ம் ஞாயிறு | [ஊ] |
| 9 | தி. | காலதினம் | [ஊ] |
| 10 | செ. | காலதினம் | [ஊ] |
| 11 | பு. | காலதினம் | [ஊ] |
| 12 | வி | காலதினம் | [ஊ] |
| 13 | வெ | காலதினம் | [ஊ] |
| 14 | ச. | காலதினம் | [ஊ] |


## சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ந் திகதி**


# அறிவுப் பசியும் உணவும்

அறிவுப்பசி அதிகரித்துக் கொண்டே வருகிறது மக்களிடையே. அதற்குணவாக அச்சகங்களும் புதிது புதிதாகப் பிரசுரங்களை வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றன.

கண்கவர் வர்ணங்களில் கவர்ச்சிச் சித்திரங்களுடன் வெளியாகும் பத்திரிகைகள் ஒருபுறம். அடுக்கு மொழிகளிலே, அலங்கார வார்த்தைகளிலே வந்துகொண்டிருக்கும் நூல்கள் மறுபுறம்.

இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, கலை, சமயம் முதலிய தலைப்புக்களிலும் வருகின்றன; காதல், துப்பறிவு, இனக்கவர்ச்சி முதலிய சாஸ்திரங்களிலும் வெளியாகுகின்றன புத்தகங்களும், பத்திரிகைகளும்.

இவையெல்லாவற்றையும் நாம் படித்துத் தள்ளலாமா? அச்சிலே வெளிவரும் அத்தனையும் நம் அறிவுப் பசிக்கு உகந்ததா?

உலகம் இதையெல்லாம் சிந்திப்பதில்லை. தீமையை நோக்கி விரைந்து செல்வது அதன் தலையான குணங்களில் ஒன்று.

இவ்விதம் நாம் கூறுவதற்கு ஆதாரம் உண்டு.

நல்வழி காட்டும் சமயசஞ்சிகைகளை வாங்குவோர் தொகை சொற்பம். நிர்மலமான உள்ளத்திலே துர்எண்ணங்களை உருவாக்க வல்ல ஆபாச ஏடுகளை ஆதரிப்போர் அதிகம்.

ஆரோக்கிய சஞ்சிகைகள், இலக்கிய இதழ்கள், விஞ்ஞான ஏடுகள் ஆதரிப்போரின்றி அல்லலுறுகின்றன. இனக் கவர்ச்சிப் பத்திரிகைகள், மர்ம நாவல்கள் பெருமளவில் விற்பனையாகின்றன.

இந்த நிலை மாறவேண்டும். தீமையை விளைக்கவல்ல வெளியீடுகட்கு ஆதரவு தருதல் நீக்கவேண்டும்.

நமது அன்னையாம் சத்திய திருச்சபை இவ்விடத்தில் மிக விழிப்புடன் செயலாற்றுகிறாள். ஆண்டு தோறும் அச்சுப்பிரசுர வாரங்களை நடாத்தி நல்வாசிப்பின் நோக்கங்களை நம்மவருக்கு அறியத்தருகின்றாள்.

ஒவ்வொரு மேற்றிராசனத்தின் சார்பிலும் கத்தோலிக்க அச்சகங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. நல்லறிவு புகட்ட வல்ல நூல்கள் பல ஆண்டு தோறும் இவ்வச்சகங்களால் வெளியிடப்படுகின்றன.

பெரும் பொருட் செலவில் கத்தோலிக்க சஞ்சிகைகளை நடாத்துகிறார்கள். ஆயின் ஆதரிப்போர் தொகையோ இரங்குதற் குரியது.

அச்சிலே வரும் நஞ்சு கொடியது. நமக்கும் சிறப்பாக நம் இளைஞர்கட்கும் பெருங்கேடு விளைக்க வல்லது.

அதற்கு மருந்து நல்வாசிப்பை அதிகரித்தலே. அச்சுப் பிரசுர வாரம் அதற்கு வழிகாட்டுகின்றது.

கத்தோலிக்கப் பத்திரிகைகட்கு சந்தாதார் ஆவதன் மூலம் அவைகளை ஆதரித்தல்.

மாதம் ஒரு கத்தோலிக்க புத்தகமாவது வாங்க முயற்சித்தல்.

இவைமூலம் நம் இல்லங்களில் நல்வாசிப்பை அதிகரித்தல்.

இவை மூன்றும் அச்சிலே வரும் நஞ்சுக்கான மாற்று மருந்துகள்.

**"மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, சருவேசுரனுடைய வாயினின்று புறப்படுகிற எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறான்."**

# வீட்டுக்கு ஒரு வேதாகமம் வேண்டும்

(வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை)

**நமது மேற்றிராசனத்தில் நல்வாசிப்புவாரம் கொண்டாடப்படும் இவ்வேளை வேதாகம நூல்கள் சிறப்பாகப் பரிசுத்த சுவிசேஷங்களாவது எல்லா வீடுகளிலும் வைத்து வாசிக்கப்படுவதை நாம் ஒவ்வொருவரும் ஏக இலட்சியமாகக் கொண்டு அதனை நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று இக்கட்டுரை கூறுகிறது. "நாட்டுக்கு ஒரு நல் அச்சகமும் வீட்டுக்கு ஒரு வேதாகமும் கேட்டைத் தடுக்கும் அரண்களாம்."**

கிறிஸ்து பிறப்பதற்குமுன் மனுக்குலம் தன் ஆசாபாசங்களின்படி நடந்ததின் பயனாய் அமைதியும், ஆறுதலும் அற்று வாக்குப்பண்ணப்பட்ட மெசியா வரமாட்டாரா என்று ஏங்கிக் கொண்டிருந்தது. அக்கால மக்கள் மதியீனராகி, அழிவுள்ளவர்களாயிருந்தும், அழிவணுகாத கடவுளின் மகிமைப்பிரதாபத்தை மறுத்து அவரைச் சிருட்டிகளின் ரூபமாகத் தம் மனம் போனபடி மாற்றினார்கள். ஒருவரோடு ஒருவர் காமத்தாற்பற்றி எரிந்தார்கள். காமம், லோபம், துஷ்டத்தனத்திலும் மூழ்கினவர்களாய் பொறாமை—கொலை—சண்டை—வஞ்சனை ஆகிய தீங்குணங்கள் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அன்றியும் இடம்புக்காரராய், அகங்காரிகளாய், அகந்தையுள்ளவர்களாய், பெற்றோருக்கு அடங்காதவர்களாய், மதியீனராய் வாழ்ந்தார்கள். அதனால், அழுகையும், பற்கடிப்புமான அந்த நாக சீவியத்திலிருந்து தம்மைமீட்டு இரட்சிப்பதற்காக வரப்போகிற மெசியாவை விரைவில் வரும்படி வேண்டிவந்தனர். மெசியர் எனப்படும் யேசுவந்து ஆறுதலைக் கற்றுக்கொடுத்தார். தெய்வ சீவியத்தைக் காண்பித்தார்.

ஆனால், இன்றோ அன்றைய மக்களின் அவலநிலையிலும் படுமோசமான அந்தஸ்தில் நெறிகெட்டபோக்கில் உலகம் போய்க் கொண்டிருக்கிறது. அநேகர் ஆஸ்திகரை மறுதலித்து நாஸ்திகம் பேசுகின்றனர். கடவுள் மனச்சாட்சியில் பதித்துத் தந்த திருக்கட்டளைகளைப் புறக்கணித்து அகற்றிவிட்டுச் சீவிக்கிறார்கள். அவற்றைமீறிச் செல்வதே முற்போக்கு என்று அபத்தம் பேசுகின்றனர். தம் அஞ்ஞானத்தைப் பரப்ப விஞ்ஞானத்தின் சகலதுறைகளையும் அச்சம் கூச்சமின்றி உபயோகித்து பஞ்சமா பாதகங்களைப் பெருக்குகின்றனர். இவ்வண்ணமாக என்றுமில்லாத பாவதுரோகங்களின் வழியில் நெறிதடுமாறிச் சென்றுகொண்டு சமாதானமின்றி அவலப்படுகின்றனர். இவ்வேளையில் உலகமீட்பர் மீண்டும் தோன்றுரோ என்று ஏங்கும்நிலை உருவாகிவிட்டது. இனிச் செய்வதென்ன? மெசியா தோன்றி நமக்குத் தந்த போதகம் உண்டு. கிறிஸ்துவின் அடைமானமும், ஆதாவும், ஞாபகமும் பொதிந்து அவரது திருச்சபையாற் பேணப்படும் பரிசுத்த வேதாகமம் உண்டு. அது மீண்டும் புத்துணர்ச்சியுடன் யாவர் நாவிலும் மனத்திலும் மலரச்செய்வதே செய்யக்கூடிய ஏக வழியாகும்.

இன்று எவ்வெவர் உள்ளத்திலும் உண்மையொளி மங்கிவிட்டது. விசுவாசம் குளிர்ந்துவிட்டது. தெய்வ சீவியம் மலையேறிவிட்டது. வழியறியாத குருடராக அலைகின்றனர். இந்நிலையில் மெசியாவின் வருகையும் அவரது போதகமுமே உண்மைவழிக்குத் திருப்பக்கூடும். 'உண்மையும், வழியும், சீவியமும் நாமே' என்று கூறியவரின் போதகங்கள் அடங்கிய பரிசுத்த சுவிசேஷங்களும் அவரது வருகையை ஆயத்தப்படுத்திய தீர்க்கதரிசனங்களும் சரித்திரங்களும் அடங்கிய பரிசுத்தவேதாகமம் ஒவ்வொருவர் வீட்டிலும் [illegible]றிருந்து வீதியெங்கும் காலையும் மாலையும் ஒலிக்கப்படல் வேண்டும். "பூர்வீகத்தில் பலமுறைகளிலும் பலவிதமாகவும் தீர்க்கதரிசிகளைக் கொண்டு நம்முடைய பிதாக்களோடு பேசின சருவேசுரன் கடைசியாய் இந்நாட்களில் தம்முடைய திருச்சுதனைக் கொண்டு நம்மோடு பேசியிருக்கிறார்" (எபிரே. 1. 1-2). பரிசுத்த வேதாகமம் தேவவெளிப்படுத்தலின் மூலநிலையமாகும். "சருவேசுரனுடைய மனுஷன் எவ்வித நற்கிரியையும் செய்வதற்குத் தகுந்த உத்தமனுவதற்குத் தேவ ஏவுதலால் அருளப்பட்ட வேதாகமங்கள் போதிப்பதற்கும்— கண்டிப்பதற்கும் — திருத்துவதற்கும்—நீதிநெறியில் நடத்துவதற்கும் பிரயோசனமுள்ளன"(2 திமோத் 3-16). வாசி; யோசி; விசுவாசி, நேசி. எதனை? வேதாகம வாக்கியங்களையே.

திருச்சபை தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு 72நூல்களை மாத்திரமே வேதாகமத்திற்குரியனவென்று தீர்மானித்துள்ளது. இவற்றுள் சிறப்பாகப் புதிய ஏற்பாட்டின் வேதாகம நூல்கள், சரித்திர நூல்கள்—ஒழுக்க நூல்கள் — தீர்க்கதரிசன நூல்களென மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சரித்திரநூல்களாக நான்கு பரிசுத்த சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடியும் அமைந்துள்ளன. அர்ச். சின்னப்பர் முதலானவர்கள் எழுதிய 21நிருபங்களும், ஒழுக்கநூல்களாகும். அர்ச். அருளப்பரின் காட்சியாகமம் தீர்க்கதரிசன நூலாகும். புதியஏற்பாட்டு ஆகமங்கள் மனிதவாழ்வை மாண்புறு நெறியிற் செலுத்தி, அன்பும் அறனும் ஓங்கச்செய்து, இன்பமும் சமாதானமும் மலரச்செய்யும் தெய்வீக சக்திபடைத்த திவ்விய கருவூலங்களாகும்.

நெறிகெட்டு அலைந்த மனிதனை மெய்நெறிக்கு வழிநடத்திய வாழ்வளிக்கும் வள்ளல் யேசுவினதும் அவரது அன்புக்குரிய தெய்வ அடியார்களதும் நூல்கள் மக்களை நல்வழியிற் செலுத்தும் சத்துராதிகளையும் நேசிக்கச் செய்யும் புதிய கற்பனையை யேசுவே உலகுக்கு அளித்தார். ஏழைகளை அரவணைக்கவும் பாவிகளை மன்னிக்கவும் பிறருக்காகத் தியாகம் செய்யவும் உயிரைத்தன்னும் அர்ப்பணிக்கவும் ஆன தெய்வ அன்பைப் போதித்தவர் யேசுவே. இவற்றையெல்லாம் இன்று அடக்கியிருக்கும் தெய்வபொக்கிஷம் புதிய ஏற்பாட்டு வேதாகம நூல்களே. யேசுவின் உள்ளத்துடிப்பும் சமாதான சீவியத்தின் உயிரோவியமும், சுவிசேஷங்களே.

உலோகாயதவாதம் உள்ஒளியை அவித்து உலகமாய்கையை விரித்துத் தப்பறையைப் போதிக்கும் இவ்வஞ்ஞானயுகத்தில் கரைதெரியாது வாழவழியறியாது அலைக்கழிக்கப்படும் இவ்வேளையின் கலங்கரை விளக்கம் பரிசுத்த சுவிசேஷமே. ஆன்மநோயைத் தீர்க்கும் பரமஔடதம் வேதாகமமே. ஒவ்வொருவர் வீட்டிலும் பரிசுத்த வேதாகமம் வாசிக்கப்பட்டு தேவவார்த்தை ஒலிக்கச்செய்வதே இன்று உலகை சமாதானத்துக்கும், அன்புமார்க்கத்துக்கும் இட்டுச்செல்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.

அர்ச். கனிசியஸ் கல்வியிற் சிறந்தவர். ஆனல் அதையிட்டு ஆங்காரம் கொள்ளாமல் தாழ்மையுள்ளவராய் இருந்தார். நீங்கள்.........?

பேச்சிலே மாத்திரமல்ல, அனுசாணையிலும் பிறர் சிநேகத்தைக் காண்பித்தார் அர்ச். அருளப்பர். வறியவர்களை நேசித்தார். தனக்கு நோகுமளவாகத் தானஞ் செய்தார். நீங்கள்.........?

புவன மலரும் அவளுடைய சகோதரனும் நாள் தவறினுலும் செபமாலை சொல்லத் தவறுவதில்லை. நீங்கள்.........?

வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை சொல்லும்வழக்கத்தைக் கைவிட்டு விடுவதிலும், விளையாட்டைக் கைவிட்டான் அமலதாசின் அண்ணன். நீங்கள்.........?

—அண்ணு.

## ஐந்து பாகங்கள்

ஒரு குடியானவனைக் கண்டு பேசும்படி அவனுடைய நண்பர் சிலர் சென்றனர். "எனக்கு வேலை அதிகம். ஒவ்வொரு நாளும் ஐந்து ரொட்டிகள் வாங்கக்கூடிய பணம் நான் சம்பாதிக்க வேண்டும்" என அவன் கூறினுன்.

"ஏன் ஐந்து வாங்கவேண்டும்?" என அவர்கள் கேட்டார்கள்.

"இந்த ஐந்தில் ஒன்றை நான் வைத்துக் கொள்கிறேன்; ஒன்றை எறிந்துவிடுகிறேன்; ஒன்றைத் திருப்பிக்கொடுக்கிறேன்; நான்காவதையும் ஐந்தாவதையும் இரவலாகக் கொடுக்கிறேன்" என குடியானவன் சொன்னதைக் கேட்ட நண்பர்கள், "நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே. தெளிவாகச் சொல்" என்ருர்கள்.

"முதல் ரொட்டியை நான் வைத்துக்கொள்வேன்; அதாவது நானே அதைச் சாப்பிடுறேன். இரண்டாவதை எறிகிறேன்; அதாவது அதை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். அவ்விதம் கொடுக்கையில், "ஓடுந் தண்ணீரின்மேல் உன் அப்பத்தை விடு; ஏனெனில், நெடுங்காலத்தின் பின் அதைக் கண்டெடுப்பாய்" (சங்கப். 11/1) என்னும் தேவவாக்கியத்தை நினைத்துக்கொள்கிறேன். மூன்ருவது ரொட்டியை வய்தான என் தந்தைக்குக் கொடுக்கிறேன்; இது நான் நியாயமாகச் செலுத்த வேண்டிய கடன். நான்காவதையும் ஐந்தாவதையும் என் பிள்ளைகளுக்கு இரவலாகக் கொடுக்கிறேன் எனக்கு வயதானதும் வேலைசெய்ய முடியாத நிலை ஏற்படும், அப்பொழுது அவர்கள் திருப்பிக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என அவன் மொழிந்தான்.

## முழந்தாளிடுங்கள்

அலெக்சிஸ் என்ற குருவானவர் கப்புச்சின் சபையைச் சேர்ந்தவர். அர்ச். சூசையப்பர்மேல் மிகுந்த பத்தி கொண்டவர். அவர் உயிர் விடுகிறதற்குச் சில நிமிடங்களுக்கு முன், அருகிலிருந்த ஒரு சந்நியாசியாரைக் கூப்பிட்டு, மெழுகுவர்த்தி கொளுத்தும்படி கூறினுர். காரணத்தை அந்தச் சந்நியாசியார் வினவினுர்.

"தேவதாய் தமது பத்தாவுடன் வருகிறுள். பெரும் மரியாதையுடன் அவர்களை வரவேற்க வேண்டுமல்லவா? மெழுகுவர்த்திகளை உடனே பற்றவையுங்கள்" எனச் சாகக் கிடந்தவர் சொன்னுர். சற்றுப்பின் அவருடைய முகம் பிரகாசித்தது: "அதோ! பரலோக இராக்கினி வருகிறுள்; அதோ! அர்ச். சூசையப்பர் வருகிருர். சகோதரரே, அவர்களை வந்தனையுடன் வரவேற்கும்படி முழந்தாளிடுங்கள்" என அவர் கூறி, மாமரி, சூசையப்பர் இவர்கள் முன்னிலையில் உயிர்விட்டார். அன்று பங்குனி 19ஆம் நாள்; அர்ச். சூசையப்பர் பாக்கியமாய் இறந்த நாள்.

## விருந்து "6"

### 5 கேள்விகள்:

1. அர்ச். லூக்காஸ் எத்தேசத்தைச் சேர்ந்தவர்?

2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம் என்றும்.........தரும்.

3. குருடரே, எது பெரிது? காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற.........

4. நாம் போசனம் அருந்துமுன் நன்றியறிந்த தோத்திரம் சொன்னுல், அது சுவிசேஷத்தில் எந்த இடத்தை நமக்கு நினைவூட்டுகிறது?

5. உமது நண்பரொருவருடைய விருந்துக்குச் சென்று பந்தியின்முன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டீர், ஆனல், உமது நண்பனுக்கு மிகவும் வேண்டிய இன்னுமொரு நண்பனுக்கு இடமளிக்கும் படியாக நீர் எழுந்து பின் பந்திக்குப் போக நேரிட்டது. அப்போது யேசுநாதர் கூறிய ஏதோ வாக்கியம் உமது நினைவுக்கு வந்தது. அது என்ன?

**நிபந்தனைகள் வழமைபோல்**

அஞ்சல் அட்டையில் எழுதாமல் மூடிய தபாலில் அனுப்பும் விடைகள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

முடிவு திகதி 28-3-64.

## மதிச்சுடர்

3. மூடன்: ஏன் லாம்பை நூர்த்தாய் மட்டி?

மட்டி: வெளியில் எவ்வளவு இருட்டு இருக்கின்றது பார்க்கத்தான் ஐயா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கண்ணீர் சிந்துவதேனம்மா?

### (தேவதாயின் 4-ம் வியாகுலம்)

(1)

பூலோகம் நாடிய நோக்கமதைப்
புரிந்திட உன்னி விரைந்து சென்று
மனுமகன் மாகொடும் யூதர் கையில்
மரணத் தீர்வையைக் கையேற்று
மாபெரும் சிலுவை சுமந்து கொண்டே
"மடிந்திடக் கல்வாரி சென்ருர்"
என்பதைக் கேட்டதும் எழுந்தோடி
ஏகையில் ஏக்கமுற்றே நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(2)

மேனி முழுமையும் செங்குருதி
பீறிப் பாயத் தள்ளாடி
வலிய சிலுவைப் பாரத்துடன்
புலிக் குழாத்திடைநின்ற செம்மறியாம்
புனிதனின் திருமுகம் நீர்நோக்க
புதல்வனும் ஏறிட்டுமை நோக்க
அன்பினுல் உண்டான அளப்பரிய
ஆகுல வாளுடுருவ நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(3)

அன்பரின் மேனியை இக்கோலம்
ஆக்கியே விட்ட பாதகர் யாம்
உந்தன் முன்னே நிற்கின்ருேம்
உளம் மிக நொறுங்கி வாடுகின்ருேம்
பவத்தினுல் அவலட்சணமான
பாதகர் எமது ஆத்துமத்தை
மனத்துயர் கொண்டே சுத்திசெய்வோம்
அகத் துயர் நீக்கி அகமகிழ்வீர்.
கண்ணீர் சிந்துவதேனம்மா!

— செல்வி ரோஜா சாமுவேல்.

[தொடர் சித்திரம்]

## அங்கத்தவர் வரிசையிலே....

B. 280 செல்வன் சி. செல்வராஜா, கிளிநொச்சி.
,, 281 ,, ஞானப்பிரகாசம் பற்றிக், கொழும்பு.
,, 282 ,, செ. கிறிஸ்ரி ராஜன், பேசாலை.
,, 283 ,, கி. அ. பங்கிராஸ், சங்கானை மேற்கு.
,, 284 ,, வ. ஆரோக்கியநாதர், தெல்லிப்பளை,
,, 285 செல்வி சரோஜா யேம்ஸ், யாழ்ப்பாணம்.
,, 286 செல்வன் ரி. அருளானந்தம், மட்டக்களப்பு.
,, 287 ,, யோண் லீனஸ் ராஜகுமார், மட்டக்களப்பு.
,, 288 ,, அ. அருள்பாலசிங்கம், பண்டத்தரிப்பு.
,, 289 ,, ஆர். மரியதாஸ், கொழும்பு 13.
,, 290 ,, இருதையம் துரைராஜா, கொட்டகலை.
,, 291 செல்வி அ. சிறிலம்மா, மண்டைதீவு கிழக்கு.
,, 292 ,, பொ. அந்தோனிக்கம் பறுணந்து, தாழ்வுபாடு.
,, 293 செல்வன் பிலிப் வேதமாணிக்கம்பிள்ளை, பலாங்கொடை.
,, 294 செல்வி செ. பபியானுள் லெம்பேட், வங்காலை,
,, 295 ,, அ. அசுந்தாமேரி யோசை, வங்காலை.
,, 296 ,, சந்தன மேரிப்பிள்ளை, பலாங்கொடை.
,, 297 ,, மேரி மனோகரி, உரும்பிராய் தெற்கு.
,, 298 செல்வன் அ. நேரிஸ் கூஞ்ஞ, பண்டிவிரிச்சான்,
,, 299 ,, அந்தோனிப்பிள்ளை யேசுதாசன் ஜெயசிங்கம், சில்லாலை
,, 300 செல்வி ஏ. மரியமலர், சில்லாலை.
,, 301 செல்வன் அ. லீனஸ் யோசை, வங்காலை,
,, 302 ,, அ. லெம்யா போல்ட் யோசை, வங்காலை.
,, 303 செல்வி தெ. மேரிதிரேசா, உருத்திரபுரம்.
,, 304 செல்வன் இ. ஞானப்பிரகாசம், கரடிப்போக்கு.

**சிறுவர்விருந்து அங்கத்தினர்**

சிறுவர்விருந்தில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் 16வயதிற்குட்பட்ட தம்பி, தங்கைகள் கீழ்வரும் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணு, சிறுவர் விருந்து காவலன் அலுவலகம், தபா. பெ. இல. 4. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.

**சிறுவர் விருந்து**
**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

பெயர் செல்வன்/செல்வி .........
..........................................
முகவரி....................................
..........................................
பிற. திக. .................................

# வியா.குலப்பாதை


## அன்றும் — இன்றும்

சா. பெ.

உலகிலுள்ள ஒவ்வொரு கத்தோலிக்க தேவாலயமும் சிலுவைப் பாதையின் ஸ்தலங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன. தபசுகாலத்திலே விசுவாசிகள் இந்தஸ்தலங்களைத் தரிசித்து, இவ்விய இரட்சகரின் திருப்பாடுகளில் பங்குகொள்கின்றனர்.

சிலுவையின்பாதை உண்மையாகவே நடந்த பலஸ்தீனுவுக்கு யாத்திரை செல்வோர் அங்கு கிறீஸ்துநடந்துசென்ற அதேவழியாகவே சிலுவைப்பாதையைச் செய்கின்றனர். அண்மையில் பலஸ்தீனுவுக்குச் சென்றபோது பரிசுத்த தந்தையும் இவ்வித சிலுவைப்பாதையை நடாத்தினுரென்பது நேயர்கள் அறிந்ததே.

பலஸ்தீனுவிலுள்ள சிலுவையின் பாதை வியாகுலப்பாதை (Via Dolorosa) என அழைக்கப்படுகிறது. இந்தப் பாதைவழியாக நாமும் மானசீகமாகச் சிலுவைப்பாதையை நடத்துவோம்.



I

ஜெருசலேமின் பழையநகரில் உரோமைய தேசாதிபதியின் மாளிகை இருந்தவிடத்தில் நாமும் கர்த்தரின் துக்ககரமான பாடுகளைத் தியானிக்கத் தொடங்குவோம். இவ்விடம் தற்போது ரோரி அன்ரோனியா (Torre Antonia) என அழைக்கப்படுகிறது.

போஞ்சியுஸ் பிலாத்து சனத்திரளின் ஆத்திரத்துக்கு அஞ்சுகிறுன். எவ்விதமும் இந்த விவகாரத்திலிருந்து ஒதுங்கிவிடுவது அவனது எண்ணம்: நீதி புறக்கணிக்கப்படுகிறது. சிலுவையிலறையுமாறு கொலைத் தீர்ப்பு எழுதப்படுகிறது.

ரோரி அன்ரோனியா என்னுமிடத்திலே இன்று பழையவரலாற்றுச் சாசனங்கள் மிகஅரிதாகவே காணப்படுகின்றன. இந்தமாளிகை அமைந்திருந்த இடத்தின் ஒருபகுதியில் நோட்டரிடாம் சியோன் என்ற தேவாலயம் நிறுவப்பட்டுள்ளது.

இங்கிருந்து சற்றுத் தொலைவில் தான் போஞ்சியுஸ் பிலாத்து கிறீஸ்துவை மக்கள்முன்னிலையில் நிறுத்தி, 'இதோ. மனிதனைப் பாருங்கள்" எனக் கூறினுன்.

இதற்குச் சற்று அண்மையில் உள்ள நீர்வைச் சிற்றுலயத்தில்தான் யாத்திரிகர்கள் முதலாம் ஸ்தலத்தைத் தியானிக்கின்றனர். இந்தச் சிற்றுலயம் பிலாத்துவின் மாளிகை அமைந்திருந்த இடத்தின்மறுபகுதியில் நிறுவப்பட்டுள்ளது.

இச்சிற்றுலயத்தின் பின்னுல் பிரான்சிஸ்கன்சபைத் துறவிகளின் ஆச்சிரமமொன்றுண்டு. யாத்திரைக் காலங்களில் மட்டுமே இச்சிற்றுலயங்கள் திறக்கப்பட்டுப் பொதுமக்களின் தரிசனைக்கு விடப்படும். மறு தினங்களில் விசுவாசிகள் சிற்றுலயத்துக்கு வெளியேநின்று முதலாம் ஸ்தலத்தைத் தியானிப்பர்.



II

இரண்டாம்,ஸ்தலம் யேசுநாதரின் மேல் சிலுவையைச் சுமத்துகிருர்கள். பிலாத்துவின்நீதாசனம் அமைந்திருந்த கபத்தா என்னுமிடத்திற்கு அண்மையில் சீயோன்சபைக் கன்னிகாமடத்தின் இடதுபுறமாக உள்ள தலத்திலேயே அக்காலத்தில் யேசுவின்மேல் சிலுவையைச் சுமத்தினுர்கள்.

பிலாத்துவின் நீதாசனத்தின்கீழ் ஸ்காலா சாந்தா (Scala Santa) என்றழைக்கப்பட்ட பலபடிவரிசைகள் இருந்தன. இப்படிகளின் வழியாகக் கிறீஸ்துவைஇறக்கிக் கடைசிப் படியண்டை கொண்டுவந்து சிலுவையை அவர்மேல் தள்ளினுர்கள். 19-வது நூற்றுண்டிலிருந்து இப்பகுதி ஒருசிறு சிற்றுலயத்தால் நினைவுகூரப்படுகிறது:

இச்சந்தர்ப்பத்தில் நேயர்கள் ஒரு சிறு உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். நான்காவது ஸ்தலம் வரை அக்காலத்தில் சம்பவங்கள் நகரத்தினுள்ளேயே இடம்பெற்றன. காலக்கிரமத்தில்நகர அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டமையால் இன்று இந்த ஸ்தலங்களிற்பல இன்றைய, பழைய நகருக்குள்ளேயே இடம்பெற்றுள்ளன.



III

இரண்டாம் ஸ்தலத்தைக் குறிக்கும் சிற்றுலயத்திலிருந்து வெளியேறுவோம். முன்பாகத்தெருவொன்று காணப்படுகிறது. சாதாரணமாகப் பழையநகரில் காணக்கூடிய தெருக்களில் இதுவும் ஒன்று. தெருவெனக் குறிப்பிடுவதிலும் பார்க்க ஒழுங்கை என்பதே மிகப்பொருத்தமாய் இருக்கும்.

சிலுவையைச் சுமந்துகொண்டு நமது இரட்சகர் இந்தப் பாதையாலேயே கல்வாரியைநோக்கி நடக்க ஆரம்பித்தார். எனினும், இரட்சகரின் புனிதபாதங்கள்பட்ட தலம்என இப்பாதையைக் கூறமுடியாது. பல நூற்றுண்டுகளின் பின்னுல் ஜெருசலேமின் இயற்கையில் பலமாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாறுதல்களுள் இப்பாதையும் நிலத்தினுள் அமுக்கப்பட்டமையும் ஒன்று:

சிலயார்தூரம் நடந்துசெல்கிருேம். பாதையின் பக்கத்திலே, மதிற்சுவரொன்றின் புறத்திலே சிலுவை அடையாளத்தைக் காண்கிருேம். பக்கத்திலே "3" எனும்இலக்கம்: ஆம், சிலுவைப்பாதையின் மூன்ரும் ஸ்தலத்தை அடைந்துவிட்டோம். டமாஸ்கஸ் வாயிலும் அண்மையில்தான் காட்சியளிக்கிறது. தரையில் ஒருமாபிள்கல்பதிக்கப்பட்டுள்ளது. அங்குதான் யேசுநாதர் முதற்தடவை மயங்கிவீழ்ந்தார்.

மாபிள்கல் குறிப்பிடும் தலத்தைப் பயபக்தியுடன் முத்தமிடுகிருேம். எமது பாவங்களின் சுமைதாளாது அவ்விடத்தில் தேவகுமாரன் குப்புற வீழ்ந்தார் என்பதைச் சிந்தனையில் கொள்கின்ருேம். எங்கள் பாவாக்கிரமங்களை எண்ணிக் கண்ணீர்வடித்துக் கொண்டே எழுந்து அடுத்த ஸ்தலத்தைநோக்கி எம்பாதையைத் தொடர்கின்ருேம்.



IV

கொல்கோத்தா எனப்படும் கல்வாரிமலைக்குச் செல்வதற்காக இவ்விடத்தில் கிறீஸ்துவின் ஊர்வலம் மேற்குத்திசைக்குத் திரும்பியது: நாமும் திரும்பி பெஞ்ஜமின்வாயிலைத் தாண்டுகிருேம். அக்காலத்தில் "மச்ச வாயில்" (Fish Gate) எனவும் இவ்விடம் அழைக்கப்பட்டது.

சிறிதுநடந்து தென்கிழக்குத்திசையில் திரும்புகிருேம். மிகஒடுக்கமான பாதையொன்று எதிர்ப்படுகிறது. இப்பாதை ஆர்மீனிய ஆசனக்கோவில்வரைசென்று முடிகின்றது. ஆர்மீனிய கிறீஸ்தவர்கள் நம்சத்திய திருச்சபையுடன் இணைந்துள்ளவர்கள் என்பதையும், இவ்விடத்தில் சற்றே நினைவுபடுத்திக் கொள்வோம்.

தேவகுமாரன் வேதனைமிகுந்த தம் அன்னையைச் சந்தித்தது இவ்விடத்தில்தான். ஆலயத்துள் செல்வோம். ஒருபகுதியில் மத்திய நூற்றுண்டுகட்கு நியதான உயிரோவியங்கள் இந்நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றன. சற்றேதள்ளி நீள்சதுர பைஜாந்திய வேலைப்பாடமைந்த ஒருகட்டடம். நடுவே இருபாதங்களின் அமைப்பு. கிறீஸ்துவும், மரியன்னையும் சந்தித்த இடத்தை அப்பாதை அமைப்புகள்நினைவுபடுத்துகின்றன.

ஒருகணம்தான் இருவரும் சந்தித்தனர்: அப்புறம். தேவகுமாரனைக் கொலைக்காரர் இழுத்துச் செல்கின்றனர். அதுகண்டு மரியன்னை மயக்கமுறுகின்ருள். அருளப்பரும், மற்றும் புனிதைகளும் மரியன்னையைக் கவனிக்கும்படி விட்டுவிட்டு, நாம் மனுமகனைப் பின்தொடர்வோம்.



V

ஜெருசலேமின் சிலபகுதிகள் இயற்கையின் ஏதுக்களால் காலக்கிரமத்தில் பூமியினுள் அமிழ்ந்திவிட்டதை முன்னர் அறிந்தோம். ஆயின் இனிமேல் நாம்செல்லும் தலங்களில் எவ்வித மாறுதலும் கிடையாது. கிறீஸ்துவின் திருப்பாதங்கள்பட்ட அதே தரையிலேயே நாமும் நடக்கின்ருேம் என்பதை எண்ணி மகிழ்ச்சிகொள்வோம்.

கிறீஸ்துவின் உடலில் தளர்ச்சி, பெலவீனம் அதிகரிக்கிறது. வேதனை தாளாமல் தள்ளாடுகிருர். கல்வாரி முடியும்வரை பாரச்சிலுவையை எவ்விதம் கொண்டுசெல்வார்எனப் பரிதாபத்துடன் நோக்குகிருேம். எல்லோரும் பார்க்கிருர்கள். ஆயினும், எவரும் உதவிசெய்ய முன்வரவில்லையே.

உரோமையதளபதி கூட்டத்தை நோக்குகிருன்: ஒடுங்கிய அப்பாதையில் திரண்டிருந்த கூட்டத்திடையே அந்நியன்ஒருவன் தளபதியின்கண்களில் தென்படுகிருன்.

கருப்புநிறமுடைய அம்மனிதன் ஆபிரிக்காவிலிருந்து அடிமையாகச் சிரேனுக்குக் கொண்டுவரப்பட்டவன். பெயர் சீமோன்என்பது. தளபதி அவனை அழைக்கிருன். சிலுவை சுமப்பதில் கிறிஸ்துவுக்கு உதவுமாறு கட்டளையிடுகிருன்:

ஆம், ஐந்தாம்ஸ்தலத்தின் அன்றைய நிகழ்ச்சி இது. வியாகுலப் பாதையில் "தாரிக் எஸ் சேராயா" என்னுமிடத்தின் பக்கமாகவே இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. ஆபிரிக்கர்கட்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ள சிற்றுலயமொன்று அவ்விடத்தைக் குறிப்பிடுகிறது. சாதாரணமாக இச்சிற்றுலயம் மூடப்பட்டேயிருக்கும்:



VI

பரிதாபத்துக்குரிய கோலத்தில் கிறிஸ்து காணப்படுகிருர். அவரின் அழகிய வதனத்தில் எத்தனைகோரக் காட்சிகள். களைப்பு, இளைப்பு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம்; காயங்களால்வடியும் குருதியும், ஆயாசத்தின் வியர்வையும் மறுபுறம்; கண்ணீர் கண்களை மூடுகிறது. எங்கு செல்வதெனத் தெரியாது தள்ளாடுகிறார்.

வீதியின் பக்கமாக ஒருவீடு. சாளரத்தின் வழியாக நங்கையொருத்தி இதைக் கவனிக்கிறாள். அவள்மனம் பதறுகிறது. உதவிசெய்ய எண்ணுகிறாள். அவசரமாக எதையோ எடுத்துக்கொண்டு கிறீஸ்துவிடம் வேகமாக வருகின்றாள்.

கையிலே அவள்எடுத்தது நங்கையர் முக்காடிடஉதவும் இறுக்கமான துப்பட்டி ஆகும். கிறீஸ்துவின் வதனத்தண்டை இருகைகளாலும் துப்பட்டியை விரித்து மெதுவாக ஒற்றுகிறாள். வியாகுலப்பாதையில் நாம் மேலே குறிப்பிட்ட ஒடுங்கிய பாதை வழியாகச் செல்லும்போது இடதுபுறத்தில் அந்நங்கை இருந்துவந்த வீட்டைக் காண்கிறோம். அக்காலத்தில் இப்பகுதி பிரயாணிகள் தங்கும் விடுதியாகக் கருதப்பட்டது.

புனிதை வெரோணிக்கா தன் தந்தையுடன் நகரத்துக்கு விஜயம்செய்து, பிரயாணிகள் விடுதியில் தங்கியிருந்தபோதே இந்நிகழ்ச்சி நடைபெற்றதாகப் பாரம்பரியங்கள் கூறுகின்றன. இம்மாது கௌரவமுள்ள குடும்பப்பெண்ணாய் இருந்தமையால் அவள் ஊர்வலத்தைத் தாமதித்துக் கிறீஸ்துவுக்குதவியதை உரோமைய வீரரோ அன்றேல் கிறீஸ்துவின் மேல் கோபவெறிகொண்ட யூதரோ தடுக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஆறுவதுஸ்தலம் இது. வெரோணிக்காள் தங்கியிருந்தவிடுதி இன்று இல்லை. அவ்வில்லத்தின் சிலபகுதிகள் இன்றுள்ள கட்டிடத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவ்வில்லத்தின் அறைகளுள் ஒன்று புனிதை வெரோணிக்காவின் பாதுகாவலில் ஒரு சிற்றாலயமாக மாற்றப்பட்டுள்ளது: கிரேக்க மெல்கீற்றே முறையில் இங்கு ஆராதனைகள் இடம்பெறுகின்றன.



VII

சிறிதுதூரம் செல்வோம். ஒருபிரதானசந்தி தென்படுகிறது. வடக்குப் புறமாக டமாஸ்கஸ் வாயிலும், தெற்குத்திசையில் சியோன்வாயிலும் காணப்படுகின்றன. கிறீஸ்துவின் காலத்தில் இங்கு "நீதியின் வாயில்" ஒன்றும் இருந்தது. கொலைத்தீர்வைபெற்ற குற்றவாளிகளை இவ்வாயிலின் வழியாகவே கல்வாரி மலைக்கு அழைத்துச் சென்றமையால் அப்பெயர் வழங்கலாயிற்று.

இவ்விடத்தில்தான்கிறீஸ்து இரண்டாவதுதடவை அறிவுமயங்கித் தரையிலே வீழ்ந்தார். வாயிலின் பக்கமாக நான்காவது நூற்றாண்டில் நிறுவப்பட்ட வளைவுசுவர்ஒன்று ஏழாவது ஸ்தலத்தை இன்று நினைவுபடுத்துகிறது. பக்கமாக VII-ம் ஸ்தலம் என்ற நினைவுக்குறியும் உண்டு.

எமதுபாதை இப்போது பழைய நகரை விட்டுப்பிரிந்து கொல்கொத்தாக் குன்றின்மீது செல்கின்றது.

எதிர் பாருங்கள்!

## சம்பத்திரிசியார் கல்லூரியில்
# திருப்பாடுகளின் காட்சி

பங்குனிமாதம் 16-ம், 17-ம் திகதி
திங்கள், செவ்வாய்த் தினங்களில் பிற்பகல்
7-15மணிக்கு.

# நம் பலி

நீங்கள் ஆவலுடன் விரும்பிக்கேட்ட
சிலகாலமாக விற்பனைக்கு எம்மிடம் இல்லாதிருந்த
"நம் பலி"
எனும் புத்தகம் தற்போது இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்டுள்ளது.
தேவையானோர் கீழ்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

### திருமதி
### சிசிலியா ஸ்ரீவனின் மறைவு

மதுரமான யேசுவே உமது கடூரமான சிலுவை மரணத்தைப் பார்த்து மரித்த சிசிலியா ஸ்ரீவனுடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளை இட்டருளும். முடிவில்லாத பிரகாசம் இவவுக்குப்பிரகாசிக்கக்கடவது, ஆமென்.

எங்கள், அன்புமிக்க நேசத்தாய் தன் அருமைப் பிள்ளைகள் மூவரையும், மருமக்கள், பேரப்பிள்ளைகளையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி கடந்த மாசி 6-ம் தேதி வியாழக்கிழமை பரலோகபிராப்தியானா. இதைக் கண்ணுறும் வண. குருக்களும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சகோதரர் யாபேரும் இவ் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அருமைத்தாயைஇழந்து பரதவிக்கும்

பிள்ளைகள்: டெய்சி ரெத்தினம், சிஸ்ரர் மேரி அசம்சன், மாகிறேற் சொர்ணம்.

மருமகன்: பீற்றர் வின்சன் சேவியர், இறப்பியல் பிரான்சீஸ்.

### நன்றியறிதல்

எங்கள் குடும்பத்தினரில் ஒருவரைப் பாரிய விபத்திலிருந்து காப்பாற்றிய இரக்கத்தின் தேவனுக்குச் சதாகாலமும் நன்றியும், புகழும் உண்டாவதாக.

எம். ஜே.

அச்சுவேலி

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய இராசாவின் இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதாவின் மன்றாட்டாலும், காவல்தூதரின் வேண்டுதலாலும் எனதுமகனுக்குஏற்பட்ட கடுமையான நோய்களிலிருந்து பலமுறை சுகம் கிடைத்தமைக்காகவும், விசேஷமாய்க் காய்ச்சலோடு அவருக்கு ஏற்பட்ட கால் நோவு விசேஷ வேண்டுதலால் சுகமாகியதற்கும் இதை நன்றியறிதலோடு பிரசுரித்து, இன்னும் பூரண சுகம் கிடைக்கவும் மன்றாடுகிறோம்.

மாதாவின் பிள்ளை.

இதைப் பாதைஎன்பதைவிட, குன்றின்மேல்செல்லும் ஒடுங்கிய ஒழுங்கை என்பதே பொருத்தமாகும். இது புதியஜெருசலேம் நகரைச் சேர்ந்த தென்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

(வளரும்)

### 6-ம் வருட
### மரண ஞாபகம்

"என்னுடையசீவியம் மின்னலைப்போல்
தோன்றி மறைந்தது;
என்சீவியத்தில் என்னை நேசித்தவர்களே,
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்."

பிறப்பு: 11-5-1907 இறப்பு: 10-3-1958

**மதுர யேசுவே! நித்திய இளைப்பாற்றியை எம். எஸ். பெரோஅவர்களுக்கு அளித்தருளும் சுவாமி. முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.**

(ஒரு பர. பிரி. திரி.)

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய எம். எஸ். பெரோரா (ஆசிரியர்) அவர்கள் எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலனின் பாதஞ்சேர்ந்த 6-ம் ஆண்டு நிறைவு தினம் இம்மாதம் 10-ந்திகதி (10-3-64) பூர்த்தியாகின்றமையால் அன்று தினம் இலாபம், கார்மேல்மாதாவின் ஆசனக் கோயிலில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். ஆகவே, இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், இனசனர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் யாவரும் தங்கள் செபங்களில் இவரை நினைவுகூரும்படி பரிவாய்வேண்டுகின்றோம்.

அருமைப் பத்தாவை இழந்து
பரதவிக்கும்:
**எம். மாகிறேற் பெரோவும்,**
அருமைத் தந்தையை இழந்து துயருறும்:
**பிள்ளைகளும்.**

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தினாலும், பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பர், சந்நீக்கிலார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டினாலும் நாங்கள் கேட்டுக்கொண்ட காரியங்கள் சகலமும் அனுகூலமாயின. பிரசுரிக்கத் தாமதமானதற்காக மன்னிப்புக் கோரி, மேலும் எங்கள் குடும்பத்துக்குத் தேவாசியும், தேவ அழைத்தலும் கிடைக்கும்படியாக மன்றாடுகின்றேன்.

அடியான்

மிருசுவில்

## திருமண வெள்ளி விழா

நிகழும் பங்குனி 15-ந் திகதி சங்கானையைச் சேர்ந்த பயஸ் யோண் இராசாவும், ஜெயராணி பிளஞ்சாட்டும் திருமணமாகி 25 வருடங்கள் பூர்த்தியாகின்றன. பரமதேவன் இக்குடும்பத்தை இவ்வளவுகாலமும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி வந்ததற்காக இவர்களின் உற்றார், சிநேகிதர் அன்றுதினம் விசேஷவிதமாக அவருக்கு நன்றிசெலுத்தும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர். தபசுகாலமாகையால் வெளிஉபசரணைகள் நடைபெறமாட்டாது.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் மூலமாகவும், பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பர் மூலமாகவும் என்குடும்பத்திற்குக் கிடைத்த ஆத்துமசரீர நன்மைகளுக்காக நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறேன்.

லோ. செ.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரி. சதாசகாய நாயகியின் அனுக்கிரகத்தால் எனக்குச் சுகங்கிடைத்தமைக்கும், மற்றும் உபகாரங்களுக்கும் நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன்.

அடியாள்,
எல். எம். தெரேசா.

## வீட்டுக்கு ஒரு ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் என்பது உலகப்பெரியார் ஒருவாய்ப்படக்கூறும் முடிபாகும். சத்தியதிருச்சபையின் அயராதஆசையும் இதுவே. சந்நியாசசபைகளின் சாங்கோபாங்கத்தின் திறவுகோலும் இதுவே.

எனவே, பரிசுத்த வேதாகமங்கள் சிறப்பாகத் திவ்விய யேசுவின் நான்கு பரிசுத்த சுவிசேஷங்கள் யாவருக்கும் பொதுவாக மலிவாகப் பதிப்பிக்கப்படல் வேண்டும்—எவ்வெவர் கையிலும் இல்லங்களிலும் இலங்கவேண்டும்—நாளும், பொழுதும் இன்பத்திலும், துன்பத்திலும் எடுத்து வாசிக்கப்படல் வேண்டும். 1964-ம்ஆண்டு நல்வாசினை வாரம் இவ் இலட்சியங்களை யாவரிடமும் நிறைவேறச் செய்யின் பெரும் பயனுண்டாகும். இதனால் தேவவாக்கியம் வாசிப்பவர்கள் நாளுக்குநாள் பெருகவே, அவர்களின் ஆன்மவாழ்வு நிச்சயமாக உரம்பெற்று வளரும். தேவமகிமைக்கும், மக்களின் இரட்சணியத்துக்கும் உதவும் ஒப்பற்றகருவியாகக் கத்தோலிக்க இல்லங்களிலும், நல்லவர்கள் அகங்களிலும் வேதாகமம் பாராயணம் பண்ணப்படுவதாக. இம்மை, மறுமை, இன்பம் இதனால் கைகூடுவது திண்ணம்.

## கல்வாரிமலையின் பெறுபேறு
## ஒரு சிலருக்கு மாத்திரமா ?

"கிறீஸ்துநாதர் ஒருசிலருக்கு மாத்திரம் கல்வாரிமலையில் உயிர் நீத்தார் என்று எவர்தான் கூறுவார்?" இவ்வாறு அமெரிக்க தேச பொஸ்டன்நகர கருதினால் குஷிங் அவர்கள் தமதுநகரத்தில் பல கிறீஸ்தவசபையினர் இருந்த ஒருகூட்டத்தில் ஒருசவால்விடுத்தார். மேலும் அவர் கூறுகையில் சகலகிறீஸ்தவசபைகளுடைய உபயோகத்துக்கென ஒருபொது பரிசுத்த ஆகமநூல் விரைவில் தோன்றும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வும் வழியும் 2.

# ஏனோ இந்தக். காயங்கள்!

— எஸ். எம். ஜே. —

சுவிசேஷக அருளப்பர் தமது இறுதிக்காலத்தில் எழுதிய காட்சியாகமத்தில், "கொலைக்களத்தில் வெட்டப்பட்ட செம்மறிப் புருவையைக் கண்டேன்" என்று எழுதியிருக்கின்றார். நமது அரிய இரட்சகர் தாமே அவருக்குத்தோன்றி, "உலகத்தின் பாவங்களைப் போக்கும் தேவ செம்மறிப் புருவை" என்று அவருக்குக் கூறியிருந்தார் என்றும் குறிப்பிடுகிறார். ஆம்,ஒரு செம்மறியைப்போல— கொலையுண்ட செம்மறியைப் போல யேசுநாத சுவாமி அருளப்பருக்குக் காட்சியளித்தார்.

இந்த மேரையாகக் கிறிஸ்துநாதர் காட்சியளிக்கக் காரணம் என்ன? நமது இரட்சகர் உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு ஆரோகணமான— அந்த மகிமைப் பிரதாபமுள்ள— பிரகாசம் ஒளிவீசும் அவரது திருச் சரீரத்தில் இன்னமும் தமது ஐந்து திருக்காயங்களையும் பதித்து வைத்திருக்கிறார் என்பதைக் காட்டவே அவர் அப்படிக் காட்சியளித்தார். ஐந்து கொடூரம் நிறைந்த காயங்களாலும் யேசுநாதர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டாரன்றோ! எல்லாவற்றுக்கும் மேலாக அவரது திருவிலாவின் காயமன்றோ மிகவும் ஆழமானது. மோட்சத்தின் ஆச்சரியங்களுள் யேசுநாதர் தமது ஐந்து திருக்காயங்களுடன் பிரசன்னமாய் இருப்பது மகோன்னத செயல் என்று கூறப்படுகின்றது.

யேசுவின் ஐந்து திருக்காயங்களும் இன்னமும் அவருடனேயே இருக்கக் காரணமென்ன என்பதை ஆழ்ந்து சிந்திப்போமானால் பல காரணங்கள் புலனாகும். யேசுவின் திருக்காயங்கள் அவரது பாடுகளின் காரணமானது என்று கருதிவிடக்கூடாது. பாடுகளின் முடிவு என்றும் எடுக்க முடியாது; இருதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமுமுடைய யேசுவின் கருணையை— தயாளத்தின் மிகுதியை நமக்கு எடுத்துக் காட்டவே அவருக்கு அக்காயங்கள் இருக்கின்றன என்பதை நாம் முதலிடத்தில் உணரவேண்டும். யேசுவின் மதுரமான இருதயத்தின் மதுரத்தன்மையை— கனிவை— கருணையை எடுத்துக் கூறிக்கொண்டே இருக்கின்றது அவரது திருவிலாவின்காயம். பாடுகளின் ஞாபக சின்னமாகவும் இன்னும் அந்தக்காயங்கள் அவருக்கு இருக்கின்றன என்பதைப் பாவமனிதராகிய நாம் எண்ணிக்கொள்ள வேண்டும்.

கடந்து போன சம்பவத்தை ஞாபகப்படுத்துவதே நினைவுச் சின்னமாகும். மதிப்புக் கூடிய பெரியவர்களையோ, வீரர்களையோ, தியாகிகளையோ, தேசத் தொண்டர்களையோ பரம்பரை பரம்பரையாக அத்தேசத்தவர்களும், பிறதேசத்தவர்களும் நினைவுறும் வண்ணம் தேசா தேசங்களில் நினைவுச் சின்னங்கள் நிறுவுகிறார்கள்; அஞ்சலி செலுத்துகிறார்கள். மனிதர் விலையுயர்ந்த பொருள்கள்; கடவுளின் புத்திரர்; எவ்வளவோ நேசத்துக்குரியவர்கள். அவர்கள் மேல் தாம் கொண்டுள்ள நேசத்தின் தன்மையை— விலையுயர்ந்த மதிப்பைக் காண்பிக்கும் ஞாபக சின்னமாகவே மோட்சவாசிகளுக்குத் தமது காயங்களை யேசுநாதர் காட்டிக்கொண்டிருக்கிறார். அன்பின் அடையாளம்; அன்பின் ஞாபக சின்னம்அவை என்றால் மிகையாகாது. அவர் தாமே தெரிந்து கொண்ட நினைவுச் சின்னங்கள் தாம் இந்தக் காயங்கள், கைகளிலும், கால்களிலும் அவர் பட்டகாயங்கள் அவரது உடல் வேதனையை எடுத்தியம்புகின்றன. கைகளையும், கால்களையும் ஆணிகளால் துளைத்த பொழுது அதுவே அவர் சரீரத்தில் அனுபவித்த அகோரம் மிகுந்த வேதனையாய் இருந்தது. அவர் திருவிலாவிற் பட்டகாயம் அவரது மன வேதனையை, இருதய வேதனையை நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவருக்கு இன்றும் இனிமேலும் இக்காயங்கள் அருமையானவை. ஏனெனில், தாம் நேசித்தவர்களுக்காகப் பட்ட வேதனைச் சின்னங்கள் தாம் அவைகள்.

கிறிஸ்துவுக்காக வாதனைகளையும், கொடிய பாடுகளையும் பட்ட புனிதர்களுக்குத் தாம்பட்டபாடுகள் அருமையானவைகளாகவிருந்தன. கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகியதனால், அவருக்கு— அவரது போதனைகளுக்கு உண்மையுடையவர்களாய் அவர் நிமித்தமாகப் பட்டபாடுகள் அந்தப் புனிதர்களுக்கு மிகவும் அருமையானவைகள்தாம். "கிறிஸ்துவின் ஞாபகமான சின்னமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், **அவருடைய ஐந்து காயங்களையும் எனது சரீரத்தில் பதித்து வைத்துக் கொள்வதையே நான் அதிகம் விரும்புவேன்**" என்று வண. வாபெர் கூறினார். இவை மிகவும் அருமையானவைகள். ஏனெனில் உருக்கம் நிறைந்தவைகள்.

அடுத்தபடியில் மனுக்குலத்தின் மீது அவர் கொண்ட அன்பின் அடமானமாகவே இந்தக் காயங்களை அவர் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறார். அடமானம், ஈடாக வைப்பது ஞாபக சின்னமாக வைத்திருப்பதை விட எவ்வளவோ உயர்ந்ததும், சிறந்ததுமாகும். இருதயத்தில் கொண்டுள்ள மாறாத— நீங்காத பற்றின் அறிகுறியாக வெளியே காட்டும் அடையாளமாக வைத்திருப்பது தான் அடமானம் என்று சொல்லப்படும். எனவே மனுக்குலத்தின் மீது அவர் கொண்டுள்ள கரைகாணா அன்பின் வெளியடையாளமாக இந்த ஐந்து காயங்களையும் தரித்துக் கொண்டிருக்கிறார். "**காணக்கூடிய வெளிக்காயம் சிநேகத்தின் பெருக்கத்தினால் அடையும் உள்ளக்காயத்துக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது**" என்று புனித பேர்ணாட் கூறுகிறார். ஏது காரணத்துக்காக இந்தக் காயங்களை யேசுநாதர் இன்னமும் வைத்திருக்கிறார் என்று நாம் எப்படி, எப்படியோ சிந்தித்துக் கொள்ளலாம். மனுமக்கள் மீது அவர் காட்டிய நன்மைத்தனம்தான் இவைக்குக் காரணம் என்பதை என்றுமே மறுத்துரைக்க முடியாது.

இந்தக் காயங்கள் தாம் இன்னமும் எங்களுக்குப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன. யேசு ஓயாமல் தமது காயம் பட்ட இருதயத்தைப் பரம பிதாவுக்கு ஒப்புக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். ஆகவே, நாம் ஒருபொழுதும் யேசுவின் திருக்காயங்களை நோக்கி உருக்கமாக வேண்டிக் கொள்ளத்தவறக் கூடாது. நாம் சோதனை வேளைகளிலும், சஞ்சலங்கள் எம்மை வாட்டும் போதும் அவரது திருக்காயங்களைச் சரணடைவோமாக.

இறுதியாக நமது இரட்சகர் தமது காயங்களை [illegible] வைத்திருக்கிறார் என்பதை நோக்குவோம். அவருடைய காயங்கள் அங்கு நோவு, வருத்தம் ஒன்றுமில்லாமல் தான் இருக்கின்றன. மகிமை நிறைந்தனவாய் விளங்குகின்றன. "**யேசுவின் சரீரத்தில் இருக்கும் காயங்கள் நட்சத்திரங்கள் போல் ஒலிக்கின்றன**" என்று திருச்சபை பாடுகின்றது. யேசுவின் மகிமை, அவரது ஜெபம், அவரது சந்தோஷம் என்பனவற்றையும் எதிர் காலத்தையுங்கூட நமக்கு விளக்கிக் கொண்டேயிருக்கின்றது. அந்தக் காயங்களினால் மனுக்குலம் பெற்றுக் கொண்ட நிகரில்லா நித்திய பேரின்பத்தையும் எடுத்துக் கூறிக் கொண்டேயிருக்கின்றன. சாவு, நோவு என்ற துன்பங்களேயற்ற முடிவில்லா இன்ப வாழ்க்கையை நினைவுறுத்துகின்றன. ஆம், மோட்ச பேரின்பத்தை ஆசிக்கிறவர்களுக்கு யேசுவின் திருக்காயங்கள் நிச்சயம் அதைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தத் திருக்காயங்களின் அளவில்லாப் பேறு பலன்களை நாம் அடையப் பிரயாசைப்படுவோமாக. ஓ! மகத்துவம் நிறைந்த திருக்காயங்களே எங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்.

(My Joke is sweet) என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## சுதந்திர மோல்டாதீவின் அரசியற் திட்டம்

இது காலவரையும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்த மோல்டாதீவு வைகாசிமாதம் 1-ம்திகதி சுதந்திரம்பெற இருக்கின்றது. ஆங்கில அரசாங்கம் அத்தீவின் அரசியற்கட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து ஒரு அரசியல்திட்டம் தயாரித்து வருகின்றது. எதிர்க்கட்சித்தலைவர் திருச்சபையின் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சில சரத்துக்களை அரசியல் திட்டத்தில் புகுத்திவிட முயற்சித்து வருகிறார். ஆனால், நாட்டுப்பிரதமரோ அவற்றை விரும்பவில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் முயற்சிகளுக்கு மோல்டாதீவுக் கத்தோலிக்கர்கள் அண்மையில் நாட்டின் தலைநகராகிய வலெற்றாநகரில் ஒரு பிரமாண்டமான கூட்டங்கூடி தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பங்குனிமாதம் 7-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org